ஸ்டார்ட்டிங்கிலேயே 30 இலட்சம் ரூபாய் தேவை இல்லை. அங்கே மகளிர் கல்லூரி உருவாக்குவதற்கு முயற்சி எடுப்பார்களா? அதுவும் முடியாவிட்டால் ஆண்களும், பெண்களும் படிக்கின்ற ஒரு கல்லூரியாவது உடனடியாக ஏற்பட செய்வதற்கு முயற்சி எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்கள் பயில்கின்ற இந்தக் கல்லூரியிலே மகளிர் சேரக்கூடாது என்று ஒரு தடை இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. மகளிர் கல்லூரி என்றால்தான் ஆண்கள் சேரத் தடை இருக்க முடியும். கிருஷ்ணகிரியிலே தர்மபுரியிலே உள்ள கல்லூரிகளிலே அப்படி மகளிருக்கு ஒரு தடை இருக்குமானால் அது நீக்கப்படும்.

சில ஊராட்சிகளை வாணியம்பாடி தாலுக்காவிலிருந்து திருப்பத்தூர் தாலுக்காவிற்கு மாற்றுதல்.

*5465—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

வடஆற்காடு-டாக்டர் அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள குரிசிலாபட்டு, பெருமாபட்டு, இருணாபட்டு, ஆண்டியப்பனூர், மிட்டூர், பூங்குளம் போன்ற ஊராட்சிகளை வாணியம்பாடி தாலுக்காவிலிருந்து திருப்பத்தூர் தாலுக்காவிற்கு மாறுதல் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள குரிசிலாபட்டு, பெருமாபட்டு, இருணாபட்டு, ஆண்டியப்பனூர், மிட்டூர், பூங்குளம் போன்ற ஊராட்சிகளை வாணியம்பாடி வட்டத்திலிருந்து திருப்பத்தூர் வட்டத்திற்கு மாறுதல் செய்யும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நீண்ட நாட்களாக இருக்கின்ற ஒரு கோரிக்கை. திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலே அடங்கிய கிராமங்கள் எல்லாப் பணிகளுக்கும்—பத்திரம் பதிவு மற்றும் மின்சாரம், அதேபோல ஊராட்சி ஒன்றியப் பணி இதற்கெல்லாம்—திருப்பத்தூருக்கு வரவேண்டியிருக்கிறது. தாலுக்கா மட்டம் வாணியம்பாடி

இருக்கின்ற காரணத்தினால் அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் 10 ஆண்டுக் காலம், 15 ஆண்டுக் காலமாக கோரிக்கை விடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதை அரசு கவனித்து உடனடியாக நிறைவேற்றுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்மிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு, அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள குரிசிலா பட்டு, பெருமாப்பட டு, இருணாப்பட்டு, ஆண்டியப்பனூர் மிட்டூர், பூங்குளம் போன்ற ஊராட்சிகளை வாணியம்பாடி வட்டத்திலிருந்து திருப்பத்தூர் வட்டத்திற்கு மாற்றுவதற்கான கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. 1991ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் காரணமாக மாவட்டம், வட்டம் மற்றும் வருவாய் கிராமங்களின் ஆட்சி வரம்பில் 1991 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் வரை எவ்வித மாற்றமும் செய்யத் தடை ஆணை அமலில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, இதைப் பிரிக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களிடம் கூட தனியாகச் சொல்லி ஒரு கடிதம் கொடுத்திருக்கிறேன். இது நீண்டகாலமாக இருக்கும் கோரிக்கை. அந்தப் பகுதிகளில் சில பணிகளுக்கு ஒட்டுமொத்தமாக திருப்பத்தூருக்கு வரவேண்டி இருக்கின்ற காரணத்தினால், தாலுக்காவுக்கு மட்டும் வாணி யம்பாடி போக இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கைகளை எண்ணி அமைச்சர் அவர்கள் உடனடியாக இந்த ஆண்டாவது பிரிப்பதற்கு ஏற்பாடு செய்வார் களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கேள்விக்குப் பதில் சொல்லிவிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தந்த அந்தக் கடிதம் என்னிடம் பத்திரமாக இருக்கிறது.

கூடலூர் தாலுக்காவைப் பிரித்தல்.

*8048—திரு. எம். கே. கரீம் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் தாலுகாவை பந்தலூர், கூடலூர் என்று இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?